©
GOVERNMENT OF TAMIL NADU
2011

[Regd. No. TN/CCN/467/2009-11.
[R. Dis. No. 197/2009.
[Price: Rs. 1.60 Paise.

# தமிழ்நாடு அரசிதழ்

## சிறப்பு வெளியீடு

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

No. 172A] சென்னை, புதன்கிழமை, ஜூன் 8, 2011
வைகாசி 25, திருவள்ளுவர் ஆண்டு — 2042

## பகுதி IV—பிரிவு 1

### தமிழ்நாடு சட்டமுன்வடிவுகள்

**2011–ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 8–ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130–ஆம் விதியின்கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.**

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 12/2011.**

***1983 –ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தினை மேலும் திருத்துவதற்கானதொரு சட்டமுன்வடிவு.***

இந்தியக் குடியரசின் அறுபத்து இரண்டாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

குறுந்தலைப்பும் தொடக்கமும்.

**1.** (1) இந்தச் சட்டம், 2011–ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது, 2011–ஆம் ஆண்டு மே திங்கள் 25–ஆம் நாள்அன்றே நடைமுறைக்கு வந்திருப்பதாக கொள்ளப்படுதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 30/1983.

89–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**2.** (இதன்பின்பு இதில் முதன்மைச் சட்டம் எனக் குறிப்பிடப்படுவதான) 1983–ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் 89–ஆம் பிரிவிலுள்ள (1)–ஆம் உட்பிரிவிற்கான வரம்புரையில், ''பத்தாண்டுகள்'' எனும் சொற்றொடருக்குப் பதிலாக, ''பத்தாண்டுகள் ஆறு மாதங்கள்'' எனும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்.

செல்லத்தக்க தாக்குதல்.

**3.** முதன்மைச் சட்டத்தில் என்ன அடங்கியிருந்தபோதிலும், தொடக்கநிலை கூட்டுறவு சங்கங்களின் நேர்வில், 2011–ஆம் ஆண்டு மே திங்கள் 25–ஆம் நாளன்றும் அது முதற்கொண்டும் செயல் விளைவு கொள்ளும் வகையிலும், மைய மற்றும் உச்ச நிலை கூட்டுறவுச் சங்கங்களின் நேர்வில், 2011–ஆம் ஆண்டு மே திங்கள் 26–ஆம் நாள்

முதற்கொண்டு செயல்விளைவு கொள்ளும் வகையிலும், தனி அலுவலராக அதிகாரங்களைச் செலுத்துகிற மற்றும் கடமைகளை ஆற்றுகிற நபர் ஒவ்வொருவரும், இந்தச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டத்தின் 89–ஆம் பிரிவின் (1)–ஆம் உட்பிரிவின்கீழ் மேற்சொன்ன கூட்டுறவு சங்கங்களின் அத்தகைய தனி அலுவலராக நியமிக்கப்பட்டுள்ளதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்; மற்றும் 2011–ஆம் ஆண்டு மே திங்கள் 25–ஆம் நாளன்று தொடங்கி இந்தச் சட்டம் ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் தேதியன்று முடிவடைகிற காலத்தின்போது மேற்சொன்ன தனி அலுவலர்களால் செய்யப்பட்ட செயல் எதுவுமோ அல்லது எடுக்கப்பட்ட நடவடிக்கை எதுவுமோ, இந்தச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டத்தின்கீழ் செல்லத்தக்க வகையில் செய்யப்பட்டிருப்பதாகவோ அல்லது எடுக்கப்பட்டிருப்பதாகவோ கொள்ளப்படுதல் வேண்டும்.

**நோக்க – காரண விளக்கவுரை.**

தொடக்கநிலைக் கூட்டுறவுச் சங்கங்களைப் பொறுத்த அளவில் 2001–ஆம் ஆண்டு மே திங்கள் 25–ஆம் நாளிலிருந்தும், மைய மற்றும் உச்சநிலைக் கூட்டுறவுச் சங்கங்களைப் பொறுத்த அளவில் 2001–ஆம் ஆண்டு மே திங்கள் 26–ஆம் நாளிலிருந்தும் ஓராண்டுக்கால அளவிற்கு 1983–ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 30/1983) 89–ஆம் பிரிவின் (1)–ஆம் உட்பிரிவின்கீழ் தனி அலுவலர்கள் நியமிக்கப்பட்டனர். மேற்சொன்ன கால அளவிற்குள்ளாக மேற்சொன்ன கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல்களை நடத்த இயலவில்லையாதலால், மேற்சொன்ன சட்டத்தைத் திருத்தியதன் மூலம், மேற்சொன்ன பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட தனி அலுவலர்களின் பதவிக்கால அளவானது 2010–ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 24–ஆம் நாளுக்கும் அப்பால் ஆறு மாதங்களைக் கொண்ட ஒரு கால அளவிற்குக் கடைசியாக நீட்டிக்கப்பட்டது. அவர்களின் நியமனக் கால அளவானது தொடக்க நிலைக் கூட்டுறவுச் சங்கங்களைப் பொறுத்த அளவில் 2011–ஆம் ஆண்டு மே திங்கள் 24–ஆம் நாளன்றும், மைய மற்றும் உச்சநிலைக் கூட்டுறவுச் சங்கங்களைப் பொறுத்த அளவில் 2011–ஆம் ஆண்டு மே திங்கள் 25–ஆம் நாளன்றும் முடிவடைவதாக இருந்தது.

**2.** கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேர்தல் நடத்துவதற்காக அரசினால் ஏற்பளிக்கப்பட்டவாறான கால அட்டவணையின்படி முதல் கட்டத்தில் முதல் இரண்டு நிலைகளுக்காக தேர்தல்கள் முறையே, 2007–ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 7–ஆம் நாளன்றும், 2007–ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 11–ஆம் நாளன்றும் நடத்தப்பட்டன. இந்தத் தேர்தல்களின்போது நடைபெற்ற ஒரு சில நிகழ்வுகள் அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டன. இந்த நிகழ்ச்சிகள் இம்மாநிலத்திலுள்ள கூட்டுறவுச் சங்கங்களுக்கான தேர்தல்களை நடத்தும் அடிப்படை நோக்கத்தையே தகர்ப்பதாக அரசு கருதுகிறது. அரசானது, கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல்களை அவை எங்கெங்கெல்லாம் நடைபெற்றனவோ, அங்கெங்கெல்லாம் நீக்கம் செய்வதெனவும் அனைத்துக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் புதிய தேர்தல்களை நடத்துவது எனவும் முடிவு செய்து அதற்கிணங்கிய வகையில் ஆணையிட்டுள்ளது. புதிய தேர்தல்களுக்கான புதிய தேர்தல் கால அட்டவணை ஒன்று உரிய முறையில் அரசினால் அறிவிக்கப்படும்.

**3.** மேற்சொன்ன பொருட்பாட்டின் காரணமாக, தொடக்கநிலைக் கூட்டுறவுச் சங்கங்களுக்கான தேர்தல்களை 2011–ஆம் ஆண்டு மே திங்கள் 24–ஆம் நாளன்றோ அல்லது அதற்கு முன்னரோ நடத்த இயலவில்லை. அனைத்துத் தொடக்க நிலைக் கூட்டுறவுச் சங்கங்களிலும் தேர்ந்தெடுக்கப்பட்ட குழுமங்கள் அமைத்துருவாக்கப்பட்ட பின்னர் மட்டுமே மைய மற்றும் உச்சநிலைக் கூட்டுறவுச் சங்கங்களுக்கான தேர்தல்களை நடத்தவியலும். எனவே அரசானது, மேற்சொன்ன கூட்டுறவு சங்கங்களின் தனி அலுவலர்களின் பதவிக்கால அளவை 2011 ஆம் ஆண்டு மே திங்கள் 24–ஆம் நாளுக்கும் அப்பால் மேலும் ஆறு மாதங்களைக் கொண்ட ஒரு கால அளவிற்கு நீட்டிப்பதென முடிவு செய்துள்ளது. அதற்கிணங்கிய வகையில், 1983–ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்திற்குத் (தமிழ்நாடு சட்டம் 30/1983) திருத்தம் செய்வது நிலுவையில் இருக்கும்போது, 2011–ஆம் ஆண்டு மே திங்கள் 23–எனும் தேதியிட்டதும் (நிலை) எண் 49–எனும் எண்ணிட்டதுமான கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் அரசாணையில் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன. மேற்சொன்ன அரசாணையில் பிறப்பிக்கப்பட்ட ஆணைகளுக்குச் செயல்விளைவு கொடுக்கும் வகையில் மேற்சொன்ன சட்டத்தின் 89–ஆம் பிரிவின் (1)–ஆம் உட்பிரிவிற்கான வரம்புரையைத் தக்கவாறு திருத்துவதுடன், 2011–ஆம் ஆண்டு மே திங்கள் 25–ஆம் நாளன்றோ, அதன் பின்னரோ, அத்தகைய தனி அலுவலர்களால் செய்யப்பட்ட செயல் எதையுமோ அல்லது எடுக்கப்பட்ட நடவடிக்கை எதையுமோ செல்லத்தக்கதாக்குவதெனவும் கூட முடிவு செய்யப்பட்டுள்ளது.

**4.** இச்சட்ட முன்வடிவு மேற்சொன்ன முடிவிற்குச் செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

**செல்லூர். கே. ராஜூ,**
*கூட்டுறவுத் துறை அமைச்சர்.*

**அ.மு.பி. ஜமாலுதீன்,**
*செயலாளர்.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.